# கவியரங்கம்

## தீபாவளிக்கு இன்றியமையாதது உடை

GMTS November 22, 2014

கவிதை சொல்ல வா என்று கவியரங்கத்துக்கு அழைத்தீர்கள்
கடைசி வரை யோசித்தாலும் கடினமாகத்தான் இருக்கிறது
வார்த்தைகள் தானாக வந்து விழவில்லை
தேடிப் பிடித்துக் கோர்த்துக் கொடுத்திருக்கிறேன்
கவிதையா இல்லையா கண்டுபிடியுங்கள்

மானம் காக்கவும்
இயற்கைச் சீற்றத்தில் இருந்து
உடலைப் பேணிக் காக்கவும்
உருவாக்கப்பட்டது உடை
இன்றோ ஆள் பாதி ஆடை பாதி என்று
மனிதரை மதிப்பீடு செய்யவே உடைதான் அளவுகோல்
உங்களைப் பற்றிய முதல் அபிப்ராயத்தின் திறவுகோல்

எண்ணெயில் லக்ஷ்மியும்
நீரில் கங்கையும் வசிக்கும் தீபாவளித் திருநாளில்
விஷ்ணு வசிக்கிறாராம் வஸ்திரத்தில்

நீதிபதிக்கு ஒரு உடை
காவலருக்கு ஒரு உடை
மருத்துவருக்கு ஒரு உடை
என்று சீருடையால் வேறுபட்டாலும்
புத்தாடை என்ற ஓர் உடையால் எல்லோரும்
ஒன்று படுவது தீபத் திருநாளில்தான்

பச்சைப் பட்டுடுத்தித் தோழி வீட்டில்

விருந்துக்குச் செல்ல

வாயில் திறந்த தோழி சொன்னது
வா என்று வார்த்தை அல்ல

ஆறு வருடங்களுக்கு முன்
தமிழ் சங்க விழாவில்
உடுத்திய உடைதானே
என்று உரைக்க

விசித்திரமாக இருக்கிறதே என்று நான் வியக்க

ஆறு வருடங்களாய் உங்கள் ஞாபக சக்தியில்
நிலைத்து நிற்கும் அளவுக்கு
சக்தி உண்டா ஓர் உடைக்கு

மகளின் முதல் பட்டுப் பாவாடை
மகனின் முதல் பிறந்த நாள் சட்டை
என்று பொத்திப் பாதுகாக்கும் உடை
ஒவ்வொன்றும் உள்ளே ஒளித்து வைத்திருக்கிறது
கவிதை போல ஒரு கதை

தீபாவளி வருவது வார நாளிலா
வார இறுதி நாளிலா
என்பதைப் பொருத்துதான் முடிவாகிறது
pakshanamum partyயும்
எந்த நாள் என்றாலும்
புத்தாடை அணிவது மட்டும் நிச்சயம்

பண்டிகை அன்று அணியும்
பாரம்பரிய உடை

பறை சாற்றுகிறது நம் பண்பாட்டை

புனித நாளில்
புடவையைப்
புனையும் விதத்தில்
புதைந்திருக்கிறது
உங்கள் ஊரின் முகவரி
தென்னிந்தியரா வட இந்தியரா வங்காளத்தைச் சேர்ந்தவரா

ஒற்றை இலக்க எண்ணில் வெப்ப நிலை
கண் கவரும் வண்ண உடை
கவசமாய்ப் போர்த்திய கம்பளி ஆடை
பனிமூட்டத்துக்குள்ளே புகை
வெடிக்கிறோம் பட்டாசை
தீபாவளி கொண்டாட நமக்கு ஏது தடை

வேலைக்குச் செல்ல ஒரு உடை
விருந்துக்குச் செல்ல ஒரு உடை
விளையாடச் செல்ல ஒரு உடை
உறங்கும்போது ஒரு உடை
குளிருக்கு ஒரு உடை
வெய்யிலுக்கு ஒரு உடை

என்று பல உடைகள் இருந்தாலும்
தீபாவளிக்கு அணிகிறோம் புத்தாடைதனை

அதன் புத்துணர்ச்சிக்கு எது இணை

காஞ்சிபுரம் பட்டோ
cotton churidhar செட்டோ
macy's-ல் வாங்கிய சட்டையோ
மதுரையில் வாங்கிய சேலையோ
அன்றாடம் அணிகிறோம் அங்கமாய்
பண்டிகை அன்று ஜொலிக்கிறது அணிகலனாய்

கடையில் காசு கொடுத்து
கந்தலான Jeans வாங்கும்
மக்கள் மத்தியில்
கந்தலானாலும் கசக்கிக்
கட்டுபவர்களும் உண்டு
தீபாவளி அன்று மகிழ்ச்சி அடைகிறார்கள்
புத்தாடை பூண்டு

உள்ளத்தைத் தொட்டு
உள்ளதைச் சொல்லுங்கள்
இங்கு இருக்கும் ஏத்தனை பேர்
இந்த வருட தீபாவளியை
உற்றார் உறவினர்களுடன் கொண்டாடினீர்கள்?
இங்கு இருக்கும் உற்ற நண்பர்களுடன் தானே கொண்டாடினீர்கள்?

முகப்புத்தகத்தில் முகம் காட்டி
whatsApp -ல் வாழ்த்துச் சொல்லி

வலை தளத்தில் விரலசைவில்
விசாரிப்புகளுடன் முடிந்து போகிறது
உறவுகளுடனான பண்டிகை

பலகாரம் இல்லாத பண்டிகை எதுவுமே இல்லை
எண்ணெயும் நெய்யும் இனிப்பும்
calorie எண்ணிக்கையில் கணக்கில் அடங்கவில்லை
அதனால் பக்ஷணம் என்றாலே பயமாக இல்லை?

விருந்தும் மருந்தும் மூன்று நாள்
என்பது முதுமொழி
விருந்து ஒரு வேளை
மருந்து மறு வேளை
என்பது தீபாவளி

திருமணமாகி america சென்று
ஐந்து மாதங்களுக்குப் பின்
தலை தீபாவளி கொண்டாட இருக்கும் மகளுக்கு
அம்மாவும் அப்பாவும்
அன்பாக advance ஆக
உடன் அனுப்புவது
உணவா? உறவா?
என்றும் மங்காத மலரும் நினைவுகளுடன் இருக்கும்
தலை தீபாவளி உடைதான்!

யார் அந்த மகள் என்கிறீர்களா?
கவிதையைக் கண்டு பிடித்தால்
மகளையும் கண்டு பிடித்திருப்பீர்கள்